<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 110/2021</u>

பெயர் : செல்வராஜ் P.W.1.

த/பெ. : சாமிநாதன்

தேதி : 27.03.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

செம்பனார்கோவிலில் ஆனந்தி தியேட்டர் எங்களுக்கு பாத்தியப்பட்டதா என்றால் பாத்தியப்பட்டது தான் ஆனால் தற்போது அந்த தியேட்டர் இல்லை. பிரதிவாதியை மேற்படி தியேட்டரில் மேலாளராக நியமனம் செய்திருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதியிடம் மேற்படி தியேட்டரை அவரே நிர்வாகம் செய்து கொள்ள அவருக்கு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்காக ரூ.50,000/– ற்கான LIC Bond ஐ பிரதிவாதி என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். வாசாஆ 1 ஆன ஒப்பந்தத்தில் சாட்சியாக என் மருமகன் தர்மராஜன் என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் வாசாஆ 6 ஆன வரவு வைத்து எழுதியவரும் எனது மருமகன் தான் என்றால் சரிதான். வாசாஆ 6 என்பது ரூ.50,000/– வரவுவைத்து மீதம் ரூ.40,000/– என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரவு வைத்த விபரங்கள் எனது மருமகனான வாசா2 ற்கு தான் தெரியும் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்களில் வாசாஆ 2 ஆன ஆவணத்தில் வாசாஆ 7 ஆன சாட்சி கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 29.09.2016 தேதியிட்ட பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்ட வாசாஆ 2 ஆன ஆவணத்தின் நகல் பிவாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாசாஆ 7 ஆன கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ஆவணங்கள் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக நாங்களே மோசடியாக தயார் செய்த ஆவணம் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எங்களது கட்டிடத்தில் இருந்து எந்த ஆஸ்பெட்டாஸ் ஷீட்டையும் எடுத்துசெல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆஸ்பெட்டாஸ் ஷீட்டை எடுத்து சென்றது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. பிரதிவாதி எங்களிடம் ரூ.90,000/– கடன் பெற்றதாகவும் அதில் அவர் ரூ.50,000/–ஐ செலுத்தி விட்டதாகவும் பாக்கி தொகையான ரூ.40,000/– செலுத்த வேண்டும் என எழுதப்பட்டுள்ளது உண்மையல்ல என்றாலும் நானும் எனது மருமகனும் ஏற்படுத்திக் கொண்ட மோசடியான ஆவணங்கள் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எழுதிக் கொடுத்த

வாடகை ஒப்பந்த பத்திரத்தின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 110/2021**

பெயர் : தர்மராஜன் P.W.2

த/பெ. : ராஜகோபால்

தேதி : 27.03.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** –

வாசாஆ 1 ஆன ஆவணம் நான் எழுதியது என்றால் சரிதான். அதில் வரவு வைத்து எழுதியதும் நான் தான். வாசாஆ 1 மற்றும் வாசாஆ 6 ஆன ஆவணங்கள் பிரதிவாதி எழுதிக் கொடுத்த ஆவணம் இல்லை என்றாலும் நாங்கள் தான் மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. வாசாஆ 2 ஆன ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். பிவாசாஆ 1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. வாசாஆ 1 மற்றும் 2 ஆன ஆவணங்கள் பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் இல்லை என்றாலும் நானும் வாசா1 ம் சேர்ந்து மோசடியாக ஏற்படுத்திய ஆவணங்கள் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியை ஆனந்தி தியேட்டரில் மேலாளராக நியமனம் செய்திருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதியிடம் மேற்படி தியேட்டரை அவரே நிர்வாகம் செய்து கொள்ள அவருக்கு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்காக ரூ.50,000/– ற்கான LIC Bond ஐ பிரதிவாதி என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. கடனுக்காக தான் LIC bond ஐ கொடுத்தார். வாடகை ஒப்பந்தத்தின் அசல் எங்களிடம் உள்ளதா என்றால் எனக்கு நினைவில் இல்லை. ஆனந்தி தியேட்டரை நிர்வாகம் செய்ய இயலவில்லை என பிரதிவாதி சென்றதால் அவர் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாசா 1 எனது மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**